மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி.

முன்னிலை:- திருமதி **R.D.** குருலட்சுமி, M.A.,M.L., PGDI & CL.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருத்தணி.
திருவள்ளுவர் ஆண்டு 2055 குரோதி வருடம் ஆவணித் திங்கள் 17-ம் நாள்
2024 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2 ஆம் நாள் திங்கட்கிழமை

நிறைவேற்று மனு எண்.6/2022
இன்
அசல் வழக்கு எண்.82/2018
(CNR.No.TNTR21-000010-2022)
...

V.G. சீனிவாசன் ... மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர்
/எதிர்/
R. கோவிந்தராஜ் ... எதிர்மனுதாரர்/ தீர்ப்பு கடனாளி

இம்மனு கடந்த 21.08.2024-ம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் R. சீனிவாசன், R. ராஜேஷ்வரபாபு, P. பிரவீனா, S.V சந்தியா, ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/தீர்ப்பு கடனாளி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் C. இளமாறன், E. அகிலன், ஆகியோர்கள் முன்னிலையாகியும், உரிய வாய்ப்பு அளித்தும் மறுப்புரை தாக்கல் செய்யாததால், எதிர்மனுதாரர் ஒருதரப்பாக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதங்களைக் கேட்டும், வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை நிலுவையில் இருந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

உத்தரவு

அசல் வழக்கு எண்.82/2018 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின்படி தீர்ப்பாணை தொகையை செலுத்த கோரியும், செலுத்தாதபட்சத்தில் நீதிமன்ற அமீனா மூலம் கைது செய்து, தீர்ப்பாணையை தொகையை வசூல் செய்திட உத்தரவிடக் கோரி மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 22, 37, 38 -ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1.** மனுவின் சுருக்கம்:-

(அ) இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.82/2018 ல் 18.10.2019 ம் தேதியிட்டு தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பாணையின் அடிப்படையில் எதிர்மனுதாரர் பணம் செலுத்தாதால் நிறைவேற்றுகை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் திருவாலங்காடு சர்க்கரை ஆலையில் பணிசெய்து வருகிறார். மேலும் எதிர்மனுதாரருக்கு திருவாலங்காடு கிராமத்தில் சொந்தமாக வீடு மற்றும் பழையனூர் கிராமத்தில் விவசாய நிலங்கள் உள்ளது. எதிர்மனுதாரருக்கு பணம் செலுத்த வசதியிருந்தும் பணம் செலுத்தாமல் காலம் தாழ்த்தி வருவதால், மேற்படி அசல் வழக்கு எண்.82/2018 ல் 18.10.2019 ம்

R D GURULAKSHMI

Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.09.02 17:26:10 -0600

தேதியிட்டு தீர்ப்பாணையின்படி தீர்ப்பாணை தொகை மற்றும் இம்மனுவின் தொகை மற்றும் செலவுத் தொகையும் வசூல் செய்திட எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பக் கோரியும் செலுத்தாதபட்சத்தில் நீதிமன்ற அமீனா மூலம் கைது செய்து, தீர்ப்பாணை தொகையை வசூல் செய்திட உத்தரவிடக் கோரி மனுதாரரால் இம்மனு செய்யப்பட்டுள்ளது.

2. எதிர்மனுதாரர்/தீர்ப்புக் கடனாளி தரப்பில் உரிய வாய்ப்பு அளித்தும் மறுப்புரை தாக்கல் செய்யாததால், ஒருதரப்பாக்கப்பட்டுள்ளார்.

**3.** <u>தீர்வுக்குரிய பிரச்சனை</u>**:-**

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**4.** <u>தீர்வு</u>**:-**

மனுதாரர் தரப்பும் கேட்கப்பட்டது. அசல் வழக்கு எண்.82/2018ல் 18.10.2019ம் தேதியிட்டு பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பாணையின்படி தொகையை வசூலிக்க இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சுமார் 5 ஆண்டுகளாக எதிர்மனுதாரர் தனது தொகையை திரும்ப தராமல் தன்னை அலைக்கழித்து வருவதாகவும், எதிர்மனுதாரர் நல்ல வசதிவாய்ப்புடன் உள்ளார் என்றும் அதைப் பொறுத்து மனுதாரர் தரப்பில் சாட்சி விசாரிக்கப்பட்டுள்ளார் என்றும், எனவே மனுவை அனுமதிக்க கோரி மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

5. மேற்படி அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவோ, மேற்படி மேல்முறையீட்டில் தடையுத்தரவு எதுவும் இருப்பதாகவோ சொல்லப்படாத நிலையிலும், எதிர்மனுதாரருக்கு போதிய வருமானம் உள்ளதாக மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ள கூற்றை மறுத்து சாட்சியங்களோ, ஆவணங்களோ முன்னிறுத்தப்படாத நிலையில், அசல் வழக்கின் தீர்ப்பாணையை நிறைவேற்ற மனுதாரர் கோரியபடி, எதிர்மனுதாரரை நீதிமன்ற அமீனா மூலம் கைது செய்து, உரிமையியல் சிறையில் அடைக்க உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, இம்மனுவை அனுமதித்து, மனுதொகையை செலுத்தும்வரை அல்லது மூன்று மாத காலம் வரை அசல் வழக்கின் தீர்ப்பாணையை நிறைவேற்ற மனுதாரர் கோரியபடி, எதிர்மனுதாரரை நீதிமன்ற அமீனா மூலம் கைது செய்து, உரிமையியல் சிறையில் அடைக்க உத்தரவிடப்படுகிறது. படி மெமோ செலுத்த ஒரு வார காலம் அவகாசம் அளிக்கப்படுகிறது. அழைக்க 03.10.2024.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2 ஆம் நாள் இந்நீதிமன்ற அவையறியப் பகரப்பட்டது.

R D GURULAKSHMI

Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.09.02 17:27:22 -0600

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>**:-**

ம.சா.1 - சீனிவாசன்

<u>மனுதாரர் தரப்பு  சான்றாவணங்கள்</u>**:-** இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**:-** இல்லை

R D GURULAKSHMI

Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.09.02 17:26:48 -0600

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.